**அக்டோபர் – 11**

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டின் நான்காவது பல்லுயிர் பாரம்பரியத் தளம்





- ஈரோடு மாவட்டத்தில் உள்ள நாகமலை குன்று ஆனது தமிழ்நாட்டின் நான்காவது பல்லுயிர் பாரம்பரிய தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இது 2002 ஆம் ஆண்டு உயிரியல் பன்முகத்தன்மை சட்டத்தின் கீழ் நியமிக்கப் பட்டு உள்ளது.
- 32.22 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள இந்தத் தளமானது, ஆழமான நீர்நிலைகள், ஆழமற்ற நில விளிம்புகள், சேற்றுப் பகுதிகள் மற்றும் பாறைப் படிமங்கள் உள்ளிட்ட பல்வேறு வாழ்விடங்களை ஆதரிக்கிறது.
- இரும்பு காலத்தினைச் சேர்ந்த பரல் உயர் பதுக்கைகள், பழங்காலப் பாறை வாழ்விடங்கள் மற்றும் 400 ஆண்டுகள் பழமையான ஆஞ்சநேயரின் கல் சிலை கொண்ட இந்தத் தளம் ஆனது தொல்பொருள் முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள மற்ற மூன்று பல்லுயிர் பாரம்பரியத் தளங்கள் மதுரையில் உள்ள அரிட்டாபட்டி, திண்டுக்கல்லில் உள்ள காசம்பட்டி மற்றும் ஈரோட்டில் உள்ள ஏலத்தூர் ஏரி ஆகியனவாகும்.

## பருத்தி சாகுபடி சரிவு

- தமிழ்நாட்டில், குறிப்பாக டெல்டா பகுதியில், பருத்தி சாகுபடியின் பரப்பளவு ஆனது இந்த ஆண்டு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ஜூலை மாதம் பருத்தி அறுவடை செய்த விவசாயிகள் (ஆடிப் பட்டம்) கடந்த ஆண்டின் குறைந்தபட்ச ஆதரவு விலையை மட்டுமே பெற்றனர்.
- இந்திய பருத்திக் கழகம் (CCI) ஆனது தமிழ்நாட்டில் 2019 ஆம் ஆண்டிலிருந்து MSP திட்டத்தின் கீழ் பருத்தியை கொள்முதல் செய்யவில்லை.
- ஆந்திரப் பிரதேச மாநிலத்தில், அம்மாநில அரசானது அதற்கான போக்குவரத்து ஆதரவை வழங்கியது ஆனால் தமிழ்நாட்டில் அத்தகைய ஆதரவு வழங்கப்படவில்லை.

- டெல்டா பகுதியில் சராசரியாக மூன்று முதல் நான்கு ஏக்கர் நிலம் கொண்ட குறைந்தது 15,000 பருத்தி விவசாயிகள் உள்ளனர்.




## தாழ் மட்ட வான்வழி இயக்கப் பொருளாதார மையம்




- ஆளில்லா விமானங்கள் மற்றும் மேம்பட்ட வான்வழி வாகனங்களின் இயக்கத்தினை மையமாகக் கொண்ட தாழ் மட்ட நிலையிலான வான்வழி இயக்கத்திற்கான (LAE) இந்தியாவின் மையமாக மாறுவதற்கான ஓர் உள்கட்டமைப்பு செயல் திட்டத்தினை தமிழ்நாடு அரசு தயாரித்து வருகிறது.
- LAE ஆனது 3,000 மீட்டர் வரையிலான உயரம் வரை மேற்கொள்ளப்படும் வான்வழி நடவடிக்கைகளை உள்ளடக்கியது.
- இதில் அதிகரித்து வரும் ஆளில்லா விமானத் தொழில்நுட்பங்களால் இயக்கப்படும் மனிதர்கள் கொண்ட மற்றும் ஆளில்லா அமைப்புகள் அடங்கும்.
- மாநில அரசானது இந்தியாவின் முதல் ஆளில்லா விமான சோதனை மையத்தை வல்லம் வடகலில் உள்ள SIPCOT வளாகத்தில் அமைத்துள்ளது.

- இது செட்டிநாடு விமான நிலையத்தில் BVLOS (காட்சிப் புலனாகும் நிலைக்கு அப்பால்) வசதிகளையும் உருவாக்கி வருகிறது.
- தமிழ்நாடு அரசு, வான்வழி வாடகை வாகன நிலையங்கள் (வெர்டிபோர்ட்கள்), ஆளில்லா விமான வழித்தடங்கள், பயிற்சி வழித்தடங்கள் மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புகளை விவரிக்கின்ற தனது மாபெரும் திட்டத்தினை 2025 ஆம் ஆண்டு LAE மன்றத்தில் வெளியிட உள்ளது.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் தூய்மையான எரிசக்தியின் வளர்ச்சி 2025

Overview of India's Renewable Energy Cumulative Installed Capacity Landscape


| Segment | FY2015 (GW) | FY2025 (GW) | FY2026 (GW) (Till 31st August 2025) | CAGR (FY2015–FY2025) | Share in FY2025 |
|---|---|---|---|---|---|
| Solar Power | 4.0 | 105.6 | 123.1 | 39% | 50.7% |
| Wind Power | 23.4 | 50.1 | 52.7 | 8% | 21.7% |
| Small Hydro Power | 4.1 | 5.1 | 5.1 | 2% | 2.1% |
| Bio Power | 8.5 | 11.6 | 11.6 | 3% | 4.8% |
| Large Hydro Power | 36.0 | 47.7 | 50.1 | 3% | 20.7% |
| **Total** | **76.0** | **220.1** | **242.6** | **11%** | **100%** |

- 2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில் இந்தியாவில் இதுவரை இல்லாத அளவில் சூரிய மற்றும் காற்றாலை மின்சாரத்தை உற்பத்தி செய்தது.
- இது 17 டெராவாட்-மணிநேரம் என்ற அளவிற்கு அதிகரித்துள்ளதுடன், மொத்த மின்சார உற்பத்தியில் சூரிய மின் உற்பத்தியின் பங்கானது 9.2% ஆக அதிகரித்தது.
- காற்றாலை மின்சார உற்பத்தி 11 டெராவாட்-மணிநேரம் என்ற அளவில் அதிகரித்ததுடன், அதன் பங்கு 5.1% ஆக உயர்ந்தது.
- தூய்மையான எரிசக்தி விரிவாக்கம் ஆனது, மின்சாரத் துறை உமிழ்வை 24 மில்லியன் டன்கள் குறைத்தது.
- நிலக்கரி அடிப்படையிலான மின்சார உற்பத்தியானது 22 டெராவாட்-மணிநேரம் ஆக குறைந்தது; எரிவாயு அடிப்படையிலான மின்சார உற்பத்தியானது 34% குறைந்தது.
- அணுசக்தி சார் மின்சார உற்பத்தியானது 14% அதிகரித்துள்ளது; நீர் மின்னாற்றல் உற்பத்தியானது 17% அதிகரித்துள்ளது.
- தூய்மையான எரிசக்தி வளர்ச்சியானது அதன் தேவையின் அதிகரிப்பை விட மூன்று மடங்கு அதிகமாக இருந்தது.
- இந்த அறிக்கையை உலகளாவிய எரிசக்தி சிந்தனைக் குழுவான எம்பர் வெளியிட்டது.

## குடிநீர் குழாய் இணைப்புகளின் வரைபடம்

- இந்திய அரசானது, ஜல் ஜீவன் திட்டத்தின் (JJM) கீழ் உள்ள அனைத்து குடிநீர் குழாய்களையும் PM கதி சக்தி தளத்தில் வரைபடமாக்க உள்ளது.

- PM கதி சக்தி தளமானது, ஒரு புவியியல் தகவல் அமைப்பு (GIS) அடிப்படையிலான டிஜிட்டல் உள்கட்டமைப்பு திட்டமிடல் கருவியாகும்.
- இது பாஸ்கராச்சார்யா தேசிய விண்வெளிப் பயன்பாடுகள் மற்றும் புவி-தகவல் நிறுவனத்தினால் (BISAG-N) உருவாக்கப்பட்டது.
- இந்தத் தளமானது, நீர் நிலைகளின் புவியிடக் குறியிடல், தனித்துவமான திட்ட நிலையிலான அடையாள எண்கள் மற்றும் JJM திட்டத்தின் கீழ் குடும்ப அளவிலான கண்காணிப்பு ஆகியவற்றை அனுமதிக்கும்.
- PM கதி சக்தி தளம் ஆனது தற்போது சாலைகள், இரயில்வே, துறைமுகங்கள் மற்றும் தளவாட உள்கட்டமைப்பு உட்பட 200க்கும் மேற்பட்ட GIS தரவு அடுக்குகளைக் கொண்டு உள்ளது.




## சப்கி யோஜனா சப்கா விகாஸ் பிரச்சாரம்




- பஞ்சாயத்து ராஜ் அமைச்சகமானது (MoPR) 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 02 ஆம் தேதியன்று நாடு தழுவிய சப்கி யோஜனா சப்கா விகாஸ் என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியது.
- 2026–27 ஆம் ஆண்டிற்கான பஞ்சாயத்து மேம்பாட்டுத் திட்டங்களை (PDPs) தயாரிப்பதற்கான 2025–26 ஆம் ஆண்டு மக்கள் திட்டப் பிரச்சாரத்தின் (PPC) தொடக்கத்தைக் குறித்தது.

- 2019–20 ஆம் ஆண்டு முதல், eGramSwaraj தளத்தில் 18.13 லட்சத்திற்கும் அதிகமான மேம்பாட்டுத் திட்டங்கள் பதிவேற்றப்பட்டுள்ளன.
- 2025–26 ஆம் ஆண்டு சுற்றுக்கு, தளத்தின் தரவுகளின் படி 2.52 லட்சத்திற்கும் அதிகமான திட்டங்கள் ஏற்கனவே பதிவேற்றப் பட்டுள்ளன.
- eGramSwaraj மற்றும் Panchayat NIRNAY போன்ற தளங்களைப் பயன்படுத்தி முந்தைய திட்டங்களை மதிப்பாய்வு செய்வதற்காக அக்டோபர் 02 ஆம் தேதியன்று சிறப்பு கிராம சபைகள் நடத்தப்பட்டன.

### இந்தியா-செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாட்டிற்கான சின்னம்




- 2026 ஆம் ஆண்டு இந்தியா-செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாட்டிற்கான அதிகாரப் பூர்வ சின்னத்தினை இந்திய அரசு வெளியிட்டது.
- இந்த உச்சி மாநாடானது, 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் புது டெல்லியில் நடைபெற உள்ளது.
- இந்த சின்னத்தில் நெறிமுறை சார்ந்த ஆளுகை, நீதி மற்றும் அரசியலமைப்பு விழுமியங்களைக் குறிக்கும் அசோக சக்கரம் ஆனது இடம்பெற்றுள்ளது.
- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தினால் (MeitY) நடத்தப்படுகின்ற இந்த உச்சி மாநாடு ஆனது உள்ளடக்கிய வளர்ச்சி, நிலைத்தன்மை மற்றும் சமூக முன்னேற்றத்தில் செயற்கை நுண்ணறிவின் பங்கை எடுத்துக்காட்டும்.


## பொருளாதாரச் செய்திகள்

### இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த குறைதீர்ப்பாளர் திட்டம்

- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 08 ஆம் தேதியன்று மத்திய மற்றும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளை இந்திய ரிசர்வ் வங்கியின் 2021 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த குறைதீர்ப்பாளரின் திட்டத்தின் (RB-IOS, 2021) கீழ் கொண்டு வந்தது.
- 1949 ஆம் ஆண்டு வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் 35Aவது பிரிவின் கீழ் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.
- RB-IOS, 2021 ஆனது, ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களின் வாடிக்கையாளர்களுக்கு விரைவான, செலவு குறைந்த மற்றும் மாற்றுக் குறை தீர்ப்பு நெறிமுறையை வழங்குகிறது.
- இந்தத் திட்டமானது, முதலில் 50 கோடி ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட வைப்புத் தொகைகளைக் கொண்டிருந்த அனைத்து வணிக வங்கிகள், பிராந்திய கிராமப்புற

வங்கிகள், பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத முதன்மை (நகர்ப்புற) கூட்டுறவு வங்கிகளை உள்ளடக்கியதாக இருந்தது.

- இதில் 100 கோடி ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட சொத்துக்கள் மற்றும் வாடிக்கையாளர் ஈடுபாடுகள் கொண்ட வங்கி அல்லாத நிதி நிறுவனங்களும்/NBFC (வீட்டுக் கடன் நிறுவனங்கள் தவிர) அடங்கும்.
- 2007 ஆம் ஆண்டு பணம் செலுத்துதல் மற்றும் தீர்வு அமைப்புகள் சட்டத்தின் கீழ் உள்ள ஓர் அமைப்பின் ஒப்பந்தம் சார் பங்கேற்பு நிறுவனங்கள் மற்றும் கடன் தகவல் நிறுவனங்களும் இதில் அடங்கும்.
- RB-IOS, 2021 ஆனது முன்னதாக உள்ள மூன்று திட்டங்களை ஒன்றிணைத்தது:
    - வங்கி அமைப்பின் குறைதீர்ப்புத் திட்டம், 2006;
    - NBFC குறைதீர்ப்புத் திட்டம், 2018; மற்றும்
    - டிஜிட்டல் பரிவர்த்தனைகள் குறைதீர்ப்புத் திட்டம், 2019.
- இந்தத் திட்டமானது, 'ஒரு நாடு ஒரு குறைதீர்ப்புத் திட்டம்' கொள்கையைப் பின்பற்றுகிறது".
- குறைதீர்ப்பாளர் 20 லட்சம் ரூபாய் வரை இழப்பீடு வழங்க முடியும் என்பதோடு மேலும் புகார்தாரரின் நேர விரயம், செலவினங்கள் அல்லது மன உளைச்சலுக்காக 1 லட்சம் ரூபாய் வரை இழப்பீடு வழங்க முடியும்.




## காலாண்டு வர்த்தகக் கண்காணிப்பு அறிக்கை

- நிதி ஆயோக் அமைப்பானது, 2024-25 ஆம் நிதியாண்டின் நான்காம் காலாண்டில் இந்தியாவின் வர்த்தகத்தினை மதிப்பிடும் நான்காவது காலாண்டு வர்த்தக கண்காணிப்பு அறிக்கையை வெளியிட்டது.
- இந்தியாவின் மொத்த வர்த்தகமானது 2024-25 ஆம் நிதியாண்டின் நான்காம் காலாண்டில் ஆண்டிற்கு 2.2% வளர்ச்சியடைந்து, 441 பில்லியன் டாலரை எட்டியது.
- இந்தியாவின் ஏற்றுமதியானது 25% வளர்ச்சியடைந்துள்ள நிலையில், ஏற்றுமதியில் 25% பங்களிப்புடன் வட அமெரிக்காவானது இந்தியாவின் மிகப்பெரியதான ஏற்றுமதி சந்தையாக இருந்தது; EU, GCC மற்றும் ASEAN ஆகிய நாடுகளுக்கான ஏற்றுமதிகள் குறைந்தன.
- விரிவான பொருளாதாரக் கூட்டாண்மை (CEPA) உடன்படிக்கையின் கீழ், தங்கத்தின் கொள்முதல் அதிகரித்ததால் ஐக்கிய அரபு அமீரகமானது ரஷ்யாவை விஞ்சி இந்தியாவின் இரண்டாவது பெரிய இறக்குமதி மூலமாக மாறியது.
- மின்னணுத் தேவை காரணமாக சீனாவிலிருந்து மேற்கொள்ளப்படும் இறக்குமதிகள்

அதிகரித்தன.

- 296 பில்லியன் டாலர் மதிப்பிலான உலகளாவியச் சந்தையில் 1.8% பங்களிக்கின்ற இந்தியாவின் தோல் மற்றும் காலணித் தொழில்துறையானது 4.4 மில்லியன் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கியுள்ளது.



# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்திய வானொலி மென்பொருள் கட்டமைப்பு




- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (DRDO), ஒருங்கிணைந்த பாதுகாப்புப் பணியாளர்கள் (IDS) மற்றும் முப்படையினருடன் இணைந்து இந்திய வானொலி மென்பொருள் கட்டமைப்பு (IRSA) 1.0 பதிப்பினை வெளியிட்டுள்ளது.
- புது டெல்லியில் உள்ள DRDO பவனில் நடைபெற்ற ஒரு தேசிய பயிலரங்கின் போது IRSA 1.0 அறிமுகப்படுத்தப்பட்டது.
- IRSA என்பது மென்பொருள் ரீதியாக இயங்கும் ரேடியோக்களுக்காக (SDR) வடிவமைக்கப்பட்ட ஒரு மென்பொருள் அம்சம் ஆகும்.
- IRSA தரநிலையானது இடைமுகங்கள், செயலி நிரலாக்க இடைமுகங்கள், செயல்படுத்தல் சூழல்கள் மற்றும் அலைவடிவ பெயர்வுத்திறன் வழிமுறைகளை வரையறுக்கிறது.

- இது இந்திய ஆயுதப் படைகள் முழுவதும் பயன்படுத்தப்படும் இராணுவத் தகவல் தொடர்பு அமைப்புகளில் ஒருங்கிணைந்த இயங்குதன்மையை செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய பதின்ம வயதினரின் புகைபிடித்தல் குறித்த WHO அறிக்கை




- உலக சுகாதார அமைப்பின் (WHO) அறிக்கையின்படி, உலகளவில் 13 முதல் 15 பேர் வரையிலான சுமார் 15 மில்லியன் சிறார்கள் வயது வந்தவர்களை விட அதிக எண்ணிக்கையில் மின்னணு-சிகரெட்டுகளைப் பயன்படுத்துகின்றனர்.
- உலகளவில் 9.1 மில்லியன் சிறுவர்களும் 5.6 மில்லியன் சிறுமிகளும் தற்போது மின்னணு சிகரெட் /வேப் பயன்பாட்டில் ஈடுபடுவதாக அறிக்கை கூறுகிறது என்ற நிலையில் இது உலகளவில் 7.2% இளம் பருவத்தினரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.
- மின்னணு சிகரெட் புகைத்தல்/வாப்பிங் ஆனது பல தசாப்தங்களாக மேற்கொண்டு வந்த புகையிலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைப் பாதிக்கக் கூடும் என்று WHO எச்சரிக்கிறது.
- மின்னணு சிகரெட்டுகளின் உற்பத்தி, விற்பனை மற்றும் விளம்பரத்தைத் தடை செய்யும் 2019 ஆம் ஆண்டு மின்னணு சிகரெட் தடைச் சட்டத்தினை இந்தியா அமல்படுத்தியுள்ளது.
- இந்தியாவில் முதல் முறையாக மின்னணு சிகரெட் உபயோகிக்கும் குற்றவாளிகளுக்கு ஓராண்டு சிறை தண்டனை அல்லது ஒரு லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

# மாநிலச் செய்திகள்

## இந்தியாவின் முதல் ABC பயிற்சி மையம் – உத்தரப் பிரதேசம்

- லக்னோ மாநகராட்சிக் கழகம் (LMC) மற்றும் ஹ்யூமன் வேர்ல்ட் ஃபார் அனிமல்ஸ் இந்தியா ஆகியவை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- அவை லக்னோவில் இந்தியாவின் முதல் பிரத்தியேக விலங்குகளுக்கான பிறப்புக் கட்டுப்பாடு (ABC) பயிற்சி மையத்தை அமைக்க உள்ளன.

- இந்த மையமானது கால்நடை மருத்துவர்கள், துணை கால்நடை மருத்துவர்கள், விலங்குகளைக் கையாளுபவர்கள் மற்றும் விலங்கு நல அமைப்புகளுக்குப் பயிற்சி அளிக்கும்.
- தெரு நாய்களில் கருத்தடை மற்றும் தொடர்புடைய நலப்பணிகளுக்கான திறன் மேம்பாட்டிற்கான தேசிய மையமாக இது செயல்படும்.




## மேரா ஹூ சோங்பா விழா




- மணிப்பூரின் இம்பாலில் உள்ள காங்லா கோட்டையில் ஆண்டுதோறும் மேரா ஹூ சோங்பா விழா நடைபெற்றது.
- இது மணிப்பூரின் பழங்குடியினச் சமூகங்களின் கலாச்சாரப் பன்முகத்தன்மையைக் கொண்டாடுகிறது.
- மணிப்பூரின் மலைகள் மற்றும் பள்ளத்தாக்குகளைச் சேர்ந்த சமூகங்களை இந்த விழா ஒன்றிணைக்கிறது.
- மேரா ஹூ சோங்பா மாநிலத்தில் உள்ள பல்வேறு குழுக்களிடையே அமைதி மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துவதற்காக இது கொண்டாடப்படுகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## அமைதிக்கான நோபல் பரிசு 2025





2025 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசானது வெனிசுலாவைச் சேர்ந்த மரியா கொரினா மச்சாடோவுக்கு வழங்கப்படுகிறது.

வெனிசுலா மக்களின் ஜனநாயக உரிமைக்காகத் தொடர்ந்து போராடியதற்காகவும். அந்த நாட்டில் சர்வாதிகாரம் மாறி ஜனநாயகம் மலர்வதற்காக அவர் நடத்திய போராட்டத்திற்காகவும் இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில், அவர் தலைமறைவாக வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது, அவரது உயிருக்கு கடுமையான அச்சுறுத்தல்கள் இருந்தபோதிலும், அவர் அந்நாட்டிலேயே வசித்து வருவது, மில்லியன் கணக்கான மக்களை ஊக்கப்படுத்தியுள்ளது.

# முக்கிய தினங்கள்

## NPS திவாஸ் 2025 - அக்டோபர் 01



- இது ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தினால் (PFRDA) கொண்டாடப் பட்டது.
- முதல் NPS திவாஸ் ஆனது 2021 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- சமூகத்தின் அனைத்துப் பிரிவினரிடையேயும் ஓய்வூதியத் திட்டமிடல் மூலம் முதுமை காலங்களில் நிதி சார் சுதந்திரத்தை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, " Inclusive Pensions, Innovative Solutions: Strengthening Retirement Security in India" என்பதாகும்.

## உலக நீலகிரி வரையாடு தினம் 2025 - அக்டோபர் 07




- வளங்காப்பாளர் E.R.C. டேவிடர் என்பவரின் பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் இந்த நாள் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.
- அவர் 1975 ஆம் ஆண்டில் முதல் நீலகிரி வரையாடு கணக்கெடுப்பை நடத்தினார்.
- நீலகிரி வரையாடுகளின் இரண்டாவது அதிக எண்ணிக்கை ஆனது நீலகிரியில் முகூர்த்தி தேசியப் பூங்காவில் பதிவாகியுள்ளது.
- IUCN பட்டியலில் நீலகிரி வரையாட்டின் வளங்காப்பு அந்தஸ்து அருகி வரும் நிலையில் உள்ள இனமாகும்.

## உலக பருத்தி தினம் 2025 - அக்டோபர் 07

- வர்த்தகம், வேலைவாய்ப்பு, வறுமைக் குறைப்பு மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சியில் பருத்தியின் பங்கு குறித்து உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும்.
- இது முதன்முதலில் 2019 ஆம் ஆண்டில் பெனின், புர்கினா பாசோ, சாட் மற்றும் மாலி ஆகிய "நான்கு முக்கியப் பருத்தி உற்பத்தி" நாடுகளால் உலக வர்த்தக அமைப்பிடம் முன்மொழியப்பட்டது.
- பருத்தியானது 24 மில்லியன் விவசாயிகளை ஆதரிக்கிறது என்பதோடு அவர்களில் கிட்டத்தட்ட பாதி பேர் பெண்கள் ஆவர் என்பதோடு மேலும் ஐந்து கண்டங்களில் உள்ள 80 நாடுகளில் 100 மில்லியனுக்கும் அதிகமான குடும்பங்களையும் இது ஆதரிக்கிறது.

- இந்திய நாடானது இந்த நாளினை "Cotton 2040: Technology, Climate & Competitiveness" என்ற கருத்துருவுடன் இத்தினத்தினை அனுசரித்தது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★